ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

26.06.2025

1. கலியினில் சிறந்த ஞானசபை
கந்தனே அருளும் நற்சபை
அழியாமை தரும் அருளமுதை
அளவிலா வண்ணம் தரும் தருமசபை

2. சபைதனை வேலவனே நிர்வகிக்க
சரவண ஜோதியில் கலந்துமே
அபயமென வருபவர்க்கு அரங்கனும்
ஆசானாய் அற்புதம் படைக்கின்றேன்

3. படைக்கவே விசுவாவசு மிதுன திங்கள்
பகருவேன் ஈராம் குருவார அருளாசி
தடைகளின்றி பிரணவக் குடிலினில்
தருமம் சிறந்தோங்க அருளுவேன்

4. அருளவே உலக உயிர்களிடத்தில்
அன்பும் தயவும் விதைக்கின்ற
வரமாக பிரணவக்குடில் தருமம்
வளர்ந்தோங்கி பல்வேறு கிளைகள் ஆக

5. ஆகவே பெருகி வருதல் காண
அனைத்து கிளைகளிலும் அரங்கன் யானும்
மகத்துவம் பல புரிந்து வருகிறேன்
மாதருமத்தில் கலந்தும் இருக்கிறேன்

6. இருக்கவே பிரணவக் குடிலெனும்
ஏழாம் படை வீடு நோக்கி வந்து
கருத்தாக கிளைகள் நிர்வாகிகளும்
கட்டாயம் தொண்டர் பெருமக்களும்

7. பெருமக்களும் மாதாந்திரம் வாராந்திரம்
பிசகின்றி அணுகி ஆசி ஏற்று
தருமம் பெருக வளர வேண்டி
தக்க பலமும் வழிகாட்டலும் தா என வேண்டி

8. வேண்டி வணங்கி வருகவே
வேலவனும் அரங்கன் யானும்
தொண்டர்கள் நிர்வாகிகட்கு
தேகபலம் மனபலம் பொருள் வளம்

9. வளமுற வழிவகை செய்து
வழிகாட்டியே உண்மைபடவே
பலமுற உடன் இருப்போம்
பசிபிணி ஆக்கினை விரட்டி

10. விரட்டியே தீவினைகள் அழிய
விரைந்துமே தருமவழி மக்களும்
மிரளா முழு சரணாகதி பெறவே
முழுமையான மாற்றம் தந்தருள்வோம்

11. அருளவே தயவும் பரிவும்
அடக்கமும் நிறைந்த வண்ணம்
பேருலகம் ஞானவான்கள் நிரம்பிய
புண்ணிய உலகாக மாறுவது உறுதி
அரங்கமகானென் குருவார அருளாசி முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி